# மட்/கமு/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் - 07 | சைவசமயம் | நேரம்: 2 மணித்தியாலம் |
|---|---|---|
| பெயர்/சுட்டெண் : | | புள்ளிகள் : |

பகுதி – I

எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை தருக.
சரியான விடையின் கீழ் கோடிடுக.

01) இறைவன் தாயுமானவராக வீற்றிருந்து அருள்பாலிக்கும் தலம்.
1) திருவானைக்கா 2) திருவாவூர் 3) திருச்சிராப்பள்ளி 4) திருவாவாடுதுறை

02) திருமுறைகள் ஓதுமுன்னும், பின்னும் சொல்லப்படுவது.
1) சிவாயநம 2) திருச்சிற்றம்பலம் 3) அன்பேசிவம் 4) இறைவணக்கம்

03) மாணவர்களின் ஒழுக்கங்களைப் போதிக்கும் நிலையம்.
1) பாடசாலை 2) கோயில் 3) வீடு 4) நூல் நிலையம்

04) உலகிலே சிறந்த குணமாகக் கருதப்படுவது.
1) இரக்கம் 2) அடக்கம் 3) நன்றி 4) பணிவு

05) 'இனி நாம் ஐவரானோம்' என சகோதர பாசத்தை எடுத்துக் காட்டியவர்.
1) இராவணன் 2) இராமன் 3) கும்பகர்ணன் 4) விபூஷணன்

06) மாத விரதங்களில் ஒன்று.
1) வெள்ளிக்கிழமை 2) செவ்வாய்க்கிழமை 3) தைப்பூசம் 4) விநாயகர் சஷ்டி

07) உழவர் திருநாள் என அழைக்கப்படும் பண்டிகை.
1) சித்திரைப் புத்தாண்டு 2) கார்த்திகை விளக்கீடு 3) தீபாவளி 4) தைப்பொங்கல்

08) தேவார முதலிகள் பாடியது.
1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா 4) திருப்புராணம்

09) திருப்பல்லாண்டு பாடியவர்.
1) சேதுராயர் 2) சேந்தனார் 3) கிருவூர்த்தேவர் 4) கண்டராதித்தர்

10) கணவனின் செயல்கண்டு என்புரு (பேய்வடிவு) பெற்ற பெண் அடியவள்.
1) திலகவதியார் 2) சங்கிலியார் 3) புனிதவதியார் 4) பரவையார்

11) ஆண், பெண் இருபாலாரும் செய்யும் நமஸ்காரம்.
1) அட்டாங்க நமஸ்காரம் 2) பஞ்சாங்க நமஸ்காரம்
3) மூன்றுமுறை குட்டிக்கும்பிடல் 4) திரியாங்க நமஸ்காரம்

12) இறைவனின் திருவருள் பார்வையால் பொற்றாளம் பெற்றவர்.
1) அப்பர் 2) சுந்தரர் 3) மணிவாசகர் 4) சம்பந்தர்

13) சுந்தரரின் இளமைப்பெயர்.
1) ஆளுடைய நம்பி 2) வன்றொண்டர் 3) நம்பியாரூரர் 4) பாலறாவாயர்

14) கல்லோடு கட்டி கடலில் இட்ட போது நாவுக்கரசர் பாடிய அற்புதப்பாடல்.
1) "மாசில் வீணையும்" 2) "சொற்றுணை வேதியன்...."
3) "கூற்றாயினவாறு..." 4) "நங்கடன்பனை...."



kalvi.lk

15) மாணிக்கவாசகரின் குருபூசைத் தினம்.
1) ஆனிமகம் 2) ஆடிச்சோதி 3) சித்திரைச்சதயம் 4) வைகாசிமூலம்

16) தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய தீர்த்தம்.
1) துர்க்காபுஸ்பகரணி 2) பாவநாஷம்
3) பாலாவி தீர்த்தம் 4) மாயவனாறு

17) சித்தாண்டி முருகன் ஆலயத்தில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள்.
1) வசந்தன் கூத்து, காவடி, கரகம், கொம்பு
2) கோலாட்டம், கும்மி
3) காவடி, சிந்து, பள்ளு
4) கரகாட்டம், கோலாட்டம், கும்மி

18) திருமூலரால் சிவபூமி என அழைக்கப்படும் நாடு.
1) இந்தியா 2) சிங்கப்பூர் 3) மலேசியா 4) இலங்கை

19) இராவணனால் சிறப்பாக வழிபட்ட தலம்.
1) திருக்கோணேஸ்வரம் 2) கீரிமலை 3) நகுலேச்சரம் 4) திருக்கேதீச்சரம்

20) சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பணியில் பெருமை பெற்ற அம்மன் ஆலயம்.
1) தெல்லிப்பளை துர்க்கையம்மன் 2) நயினாதீவு நாகபூஷணியம்மன்
3) நல்லூர் வீரமாகாளியம்மன் 4) மட்டுவில் பன்றித் தலைச்சியம்மன்

**(20 x 2 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

1ம், 2ம், 3ம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. நன்றி மறவாமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய இதிகாச நாயகர்கள் இருவரும் யாவர்?
2. சிவனால் 'அம்மையே' என அழைக்கப்படும் பேறுபெற்ற பெண் அடியவர் யார்?
3. மும்மலங்களும் எவை?
4. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களும் எவை?
5. நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்களை எழுதுக.

**(5 x 2 = 10 புள்ளிகள்)**

02) பின்வரும் திருப்பாடல்கள் இரண்டினைத் தெரிவு செய்து பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுக.
1) "நிரைகழலரவம்......."
2) "மாதர்ப்பிறைக்....."
3) "நாத்தார்........"
4) "வேதநெறி......"
5) "பொன்னார் மேனியனே..."

**(10 x 2 = 20 புள்ளிகள்)**



kalvi.lk

03) இடைவெளி நிரப்புக.

(கிராமிய வழிபாடு /சொரூபலக்கணமும் / கோபுரத்தை / காரைக்காலம்மையார் / பௌத்த சமயம்)

1. ஆலயத்தினை அண்மித்ததும் தூலலிங்கமாகிய ...................... முதலில் வணங்க வேண்டும்.
2. ஆகம நெறிக்குட்படாத வழிபாடு ........................................ என அழைக்கப்படும்.
3. கடவுளுடைய நிலைகளில் ................................................................ ஒன்றாகும்.
4. இறைவனிடத்தில் இறவாத இன்ப அன்பு வேண்டியவர் ....................................... ஆவார்.
5. .............................. என்பது புத்தபகவானின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டது.

**(5 x 2 = 10 புள்ளிகள்)**

04) வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியமைத்துக் கொடுப்பது சமயமாகும்

1. பாடசாலையில் நிகழும் சைவசமய விழாக்கள் எவை? இவ்விழாக்கள் கொண்டாடுவதனால் ஏற்படும் பயன்கள் எவை?
2. வாழ்வியல் நற்பண்புகள் மூன்று தருக.
3. நாம் கொண்டாடப்படும் பண்டிகைகள் மூன்றினைக் கூறுக.

**(4+3+3= 10 புள்ளிகள்)**

05) ‘‘திருமுறைகள் தெய்வீகத் தன்மை பொருந்திய ஒழுங்குமுறையாகும்’’

1. தேவாரங்கள் எத்தனை திருமுறைகளுள் அடங்கும், அவற்றைப் பாடியோர் மூவரும் யாவர்?
2. பத்தாம் திருமுறை எது? அதனை அருளியவர் யார்?
3. பதினொராம் திருமுறை பாடியோர் எண்ணிக்கை யாது? பெரியபுராணம் பாடியவர் யார்?

**(4+3+3= 10 புள்ளிகள்)**

06) ‘‘என் கடன்பணி செய்து கிடப்பதே’’

1. ஆலயத் தொண்டுக்கு தம்மை அர்ப்பணித்த நாயனார் யார்?
2. அவர் செய்த அற்புதங்கள் மூன்றினைக் கூறுக.
3. சிவனடியார்களின் பெருமைகளை திருத்தொண்டர் தொகையில் பாடிய பெருமைக்குரியவர் யார்?

**(4+3+3= 10 புள்ளிகள்)**

07) ‘‘கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோண மாமலையமர்ந்தாரே’’

1. மாருதப்புரவீகவல்லி நோய்தீர்ந்து குதிரை முகம் நீங்கி பிரகாசித்த சிறப்புக்குரிய தீர்த்தம் எது?
2. மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமானின் பழமை சிறப்பு யாது?
3. சேர்.பொன். இராமநாதன் சைவசமயத்திற்கு செய்த தொண்டுகள் 04 எழுதுக.

**(4+3+3= 10 புள்ளிகள்)**



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන



kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457